புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்
• திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஆகஸ்ட் 08, 2024 • புரட்சி 24 • முழக்கம் 30 • விலை ரூ.3.00

# கழகத் தலைவரின் சுற்றுப்பயணம் தொடங்கியது

## போதைக்கு எதிரான பரப்புரைக்குத் தயாராக அறிவுரை

19.07.2024 அன்று தலைமைக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவின்படி, கழகத் தலைவரின் மாவட்ட வாரியான சுற்றுப்பயணம் சென்னையில் தொடங்கியது.

சென்னை மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் 04.08.2024 அன்று மயிலாப்பூரில் உள்ள கழகத் தலைமை அலுவலகத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையிலும், கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையிலும் நடைபெற்றது.

முதல் நிகழ்வாக அண்மையில் மறைந்த கழகச் செயல்வீரர் மதிவாணன் அவர்களின் படத்தைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்தார். பின்னர் ஒரு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. மேலும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட அவரது மகன் தமிழரசன் மாவட்டக் கழக வளர்ச்சி நிதியாக ரூ.5000/- வழங்கினார்.

மேலும் தற்போது போதைப்பொருள் கலாச்சாரம் இளைஞர்கள் மத்தியில் வேகமாகப் பரவி வரும் சூழலில் அதற்கு எதிரான பரப்புரைகளைக் கழகத் தோழர்கள் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும் எனக் கழகத் தலைவர் தனது உரையில் குறிப்பிட்டுப் பேசினார்.

கழகப் பொதுச்செயலாளர் பேசுகையில் ஊடகங்களும், பத்திரிகைகளும் ஆளும் ஒன்றிய சர்வாதிகார அரசின் கைப்பாவையாகச் செயல்பட்டு வரும் இந்தக் காலகட்டத்தில் முகநூல் - டிவிட்டர் (எக்ஸ்) போன்ற சமூகவலைதளங்களே நமக்கான ஆயுதமாகத் திகழ்கிறது. எனவே கழகத் தோழர்கள் சமூக வலைதளங்களைச் சரியான முறையில் பயன்படுத்திப் பெரியாருக்கு எதிராக முன்வைக்கப்படும் அவதூறுகளுக்குப் பதிலடித் தர வேண்டும் எனப் பேசினார்.



இதில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக்குழு உறுப்பினர் அன்பு தனசேகர், மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, வட சென்னை மாவட்ட அமைப்பாளர் சேத்துப்பட்டு இராசேந்திரன், கழக இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார், எட்வின் பிரபாகரன், அருண் கோமதி, தினகரன், இரண்யா ஆகியோர் தங்களது கள அனுபவங்களையும், எதிர்காலப் பணிகள் குறித்தும் கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

மேலும் இந்தக் கூட்டத்தின் முடிவில் சென்னை மாவட்டக் கழகத்திற்குப் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

கலந்துரையாடலுக்கு வருகைதந்த சென்னையைச் சேர்ந்த ஸ்ரீஜன் - பொன்மலர் மற்றும் பல்லாவரம் நரேஷ் (எ) அழகிரி ஆகியோர் தங்களைக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். அவர்களுக்குக் கழகத் தலைவரும், பொதுச்செயலாளரும் நூல்களை வழங்கி வரவேற்றனர்.

சென்னையில் கடந்த மூன்று மாதங்களில் பத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கழகத்தில் புதிதாக இணைந்தனர். அவர்கள் தோழர்கள் மத்தியில் தங்களை அறிமுகப் படுத்திக் கொண்டனர். அவர்கள் அனைவரும் சமூக வலைதளங்களின் மூலமாகக் கழகச் செயல்பாடுகளை அறிந்து கொண்டதன் பின் தாங்கள் கழகத்தில் இணைந்ததாகக் குறிப்பிட்டுப் பேசினார்கள்..

இதில் மாவட்ட - பகுதிக் கழக நிர்வாகிகள் மற்றும் கழகச் செயல்வீரர்கள் உள்ளிட்ட ஐம்பதுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.



### காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் மாவட்டக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் 05.08.2024 திங்கட்கிழமை காலை 10 மணியளவில் வாலாஜாபாத் ஒன்றியம் கருக்குப்பேட்டை சங்கர் மகாலில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார். கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் முன்னிலை வகித்தார். காஞ்சிபுரம் மாவட்ட அமைப்பாளர் இரவிபாரதி கூட்டத்தை ஒருங்கிணைத்தார்.

கூட்டத்தில் காஞ்சிபுரம் மாவட்டக் கழகத்தின் அடுத்தக்கட்டப் பணிகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

மேலும் காஞ்சிபுரம் மாவட்ட அமைப்பாளர் இரவிபாரதி, கடந்த ஒருமாத காலமாகக் கழக வார ஏடான "புரட்சிப் பெரியார் முழக்க" சந்தா சேர்ப்புப் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருந்ததார். முதல்கட்டமாக சுமார் 50 சந்தாக்கள் சேர்க்கப்பட்டு அதற்கான தொகை ரூ.15,000/-யைக் கழகத் தலைவரிடம் வழங்கினார்.

கூட்டத்தின் முடிவில் காஞ்சிபுரம் மாவட்டக்கழகத்திற்குபுதியப்பொறுப்பாளர்களை கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிவித்தார்.

அதனடிப்படையில் மாவட்ட அமைப்பாளராக க.ரவிபாரதி, மாவட்டத் துணை அமைப்பாளராக இராம ஜெயம், வாலாஜாபாத் ஒன்றிய அமைப்பாளராக ஏழுமலை ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நிறைவாகப் பிரகாசு நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.

கூட்டத்தில் வினோத், அருண்குமார் ஆகிய இரண்டு இளைஞர்கள் தங்களைக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். அவர்களுக்கு கழகத் தலைவர் பயனாடை அணிவித்து வரவேற்றார்.

இதில் ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ப.அருண்குமார் உள்ளிட்டத் தோழர்கள் - ஆதரவாளர்கள் பங்கேற்றனர்.

முன்னதாகத் தோழமைக் கட்சியைச் சேர்ந்த பலரும் கழகத் தலைவரைச் சந்தித்து பயனாடை அணிவித்து வரவேற்றனர்.

### வேலூர்

வேலூர் மாவட்டக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் 05.08.2024 அன்று குடியாத்தம் புட்டவாரிப்பல்லி கிராமத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை வகித்தார். கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் முன்னிலை வகித்தார்.

இந்தக் கூட்டத்தில் மாவட்டக் கழக வளர்ச்சி மற்றும் கழகத்தின் அடுத்தகட்ட செயல் திட்டங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. மேலும் போதைப் பொருள் ஒழிப்பு வாகனப் பரப்புரையின் செயல் திட்டங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தின் முடிவில் வேலூர் மாவட்டக் கழகத்திற்கு புதியப் பொறுப்பாளர்களைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிவித்தார்.

தமிழ்நாடு அறிவியல் மன்றத்தின் வேலூர் மாவட்டத் தலைவராக தெருவிளக்கு கோபிநாத், வேலூர் மாவட்ட அமைப்பாளராக ரேணு, நெமிலி ஒன்றியச் செயலாளராக நரேன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்..

இதில் மேலும் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத் தலைவர் திலீபன், ஒருங்கிணைந்த



மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் இரா.சிவா, மாவட்டப் பொருளாளர் சதிஷ், தெருவிளக்கு கோபிநாத், சேப்பாக்கம் சதிஷ், கஜேந்திரன், பாலகுமாரன், முரளி, பாஸ்கர் சந்திரன், பிரவீனா, சிலம்பரசன், அமல்ராஜ்,செல்வகுமார் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக கழகத் தோழரும் வழக்கறிஞருமான அமுல்ராஜ் கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தனது கிராமத்தில் நடத்திவரும் "தந்தை பெரியார் இரவுப் பாடசாலை"யின் பெயர்ப் பலகையைக் கழகத் தலைவர் திறந்து வைத்தார். மேலும் அண்மையில் வழக்கறிஞராக பதிவு செய்த அமுல்ராஜுக்குக் கழகத் தலைவர், பயனாடைப் போர்த்தி வாழ்த்தினார். ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் தர்மகத்தா உள்ளிட்ட ஊர் பெரியோர்கள் மற்றும் இரவுப்பள்ளி மாணவர்கள் பங்கேற்றனர்.

தலையங்கம்

# பார்ப்பனிய மனநிலை கூடாது!

பட்டியல் பிரிவினருக்கு உள்இடஒதுக்கீடு வழங்க மாநில அரசுக்கு அதிகாரம் உள்ளது என்ற உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வின் தீர்ப்பு பல்வேறு மட்டங்களில் விவாதத்தை ஏற்படுத்தியிருக்கிறது. பட்டியல் ஜாதியினரைக் கூறுபோடலாமா என்பதுதான் அந்த விவாதத்தின் மையப்பொருளாக இருக்கிறது. இந்த வாதம் என்பது இடஒதுக்கீட்டுக்கு எதிராகப் பார்ப்பனியம் நீண்டகாலமாக முன்வைக்கும் வாதம்தான். இடஒதுக்கீட்டைக் கொண்டுவந்து இந்துக்களைக் கூறுபோடலாமா என்ற பார்ப்பனிய சிந்தனைதான், பட்டியல் சமூகத்தினரை கூறுபோடலாமா என்று இப்போது மருவியிருக்கிறது. எல்லா மட்டங்களிலும் சமத்துவம் வேண்டும், பட்டியல் சமூகத்தினருக்குள்ளும் சமத்துவம் வேண்டுமென்பதுதான் உள்இடஒதுக்கீட்டின் நோக்கம்.

ஆனால் அதை ஏற்காமல், உள்இடஒதுக்கீடு வழங்கப்படக்கூடாது என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச்செயலாளரும் விழுப்புரம் மக்களவை உறுப்பினருமான ரவிக்குமார் அவர்களும் கூறியிருக்கிறார். ‘‘பட்டியல் பிரிவினருக்கு உள் இடஒதுக்கீடு வழங்க மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கக்கூடாது. பட்டியல் பிரிவினருக்கான இடஒதுக்கீடு என்பது அரசியலமைப்புச் சட்டத்திலேயே வழங்கப்பட்டுவிட்டது. அதன் அதிகாரம் ஒன்றிய அரசிடம்தான் இருக்க வேண்டும்’’ என்ற வாதத்தை அவர் முன்வைக்கிறார். இது விடுதலைச் சிறுத்தைகள் கட்சி முன்வைக்கும் மாநில உரிமை, கூட்டாட்சித் தத்துவத்திற்கு முற்றிலும் முரணானது. இடஒதுக்கீட்டிற்காக ஒரு நூற்றாண்டாக இயக்கம் கண்டு பிற்படுத்தப்பட்ட, பட்டியல், பழங்குடி சமூகங்களின் வாழ்வியல் நிலைகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிற தமிழ்நாட்டில் இருந்து இப்படியொரு குரல் எழுவது ஆபத்து நிறைந்தது.

அதேசமயம் ‘‘உள்இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டுமென்றால், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் பெரும்பான்மை சமூகமான வன்னியர்களுக்கு 10.5 விழுக்காடு வழங்க முன்வந்ததைப் போல, பட்டியல் சமூகத்தில் பெரும்பான்மை சமூகமான ஆதிதிராவிடர்களுக்குத்தான் வழங்கப்பட வேண்டும்’’ என்ற கருத்தையும் அவர் கூறுகிறார். உள் இடஒதுக்கீடே கூடாது என்று ஒருபக்கம் சொல்கிறார், இன்னொருபக்கம் ஆதிதிராவிடர்களுக்குத்தான் வழங்கப்பட வேண்டும்’’ என்ற ஆதங்கத்தையும் வெளிப்படுத்துகிறார். இது அவருடைய ஜாதித்தூய்மைவாத சிந்தனையை வெளிப்படுத்துகிற பெரும்பான்மைவாதமாகத்தான் பார்க்க முடிகிறது. இடஒதுக்கிட்டின் அடிப்படை நோக்கம் என்பதே கல்வி ரீதியாகவும், சமூக ரீதியாகவும் பின்தங்கிய மக்களை உயர்த்துவதே. அந்த நோக்கத்திற்காக எந்த மட்டத்தில் இடஒதுக்கீடு விரிவுபடுத்தப்பட்டாலும் அதை வரவேற்கலாம். ஆனால் வன்னியர்களுக்கான 10.5 விழுக்காடு உள்இடஒதுக்கீடு என்பது தேர்தல் ஆதாயத்திற்காக, எடப்பாடி பழனிச்சாமி அரசால் வழங்கப்பட்டது. சமூகப் பொருளாதார ஆய்வுகள் இல்லாமல், ஜாதிவாரிக் கணக்கெடுப்பு இல்லாமல் அவசர கதியில் வழங்கப்பட்டது. அதனால்தான், சட்டப்படி செல்லாது என்ற நிலை ஏற்பட்டது.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள சமூகங்களின் ஜாதிவாரி கணக்கெடுப்பு, கல்வி – சமூகப் பொருளாதார ஆய்வுகள் அனைத்தும் எடுக்கப்பட்ட பின்பே, வன்னியர்களுக்கு உள்இடஒதுக்கீடு தேவையா இல்லையா என்பது குறித்து பரிசீலிக்க இயலும். எனவே அதிமுக – பாமக கூட்டணியின் தேர்தல் ஆதாயத்துக்காக நடத்தப்பட்ட இடஒதுக்கீட்டு நாடகத்தை அளவுகோலாக வைத்துக்கொண்டு, அதைப்போல ஆதிதிராவிடர்களுக்கும் உள்இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டுமென்று பேசுவதோ, கோரிக்கை வைப்பதோ அபத்தமானது. உண்மையில் பட்டியல் சமூகத்தினரிலேயே மிகவும் ஒடுக்கப்பட்ட சமூகம் என்றால் அது அருந்ததியர் சமூகம்தான். கலைஞரால் அருந்ததியர்களுக்கான உள் இடஒதுக்கீடு வழங்கப்படுவதற்கு முன்பாக, அச்சமூகத்தில் இருந்து மருத்துவர்களும், பொறியாளர்களும் ஒற்றை இலக்கத்தில்தான் வந்துகொண்டிருக்கின்றனர். ஆனால் உள் இடஒதுக்கீட்டின் பலனாக இப்போது ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான மருத்துவர்களும், ஆயிரக்கணக்கான பொறியாளர்களும் உருவாகிக்கொண்டிருக்கிறார்கள். ஜாதித் தூய்மைவாதம் பட்டியல் சமூகத்தினருக்குள் எள்ளளவும் ஒற்றுமையை ஏற்படுத்தாது. சம வாய்ப்புகள், சம உரிமைகளோடு கரம் கோர்க்கும்போதே ஒற்றுமை வலுப்பெறும். அதற்கான பாலமாக உள் இடஒதுக்கீடு பயன்பட வேண்டுமென்பதே நமது நோக்கம்.

இச்சமயத்தில் வன்னியர்களுக்கான 10.5 விழுக்காடு இடஒதுக்கீடு தொடர்பாக வெளியாகியிருக்கும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தையும் கவனத்தில்கொண்டு பாமகவுக்கு சில கேள்விகளை எழுப்ப வேண்டியிருக்கிறது. மருத்துவம் – சட்டம் – பொறியியல் என அனைத்துத் துறைகளிலும் 10.5 விழுக்காட்டிற்கு அதிகமாகவே வன்னியர் சமூகம் பெற்றுக்கொண்டிருக்கிறது என்பதே ஆர்.டி.ஐ. தகவலின் சாராம்சம். ஆனால் உயர் பொறுப்புகளில் வன்னியர்கள் இல்லை என்கிறார் அன்புமணி ராமதாஸ். மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருக்கிற மற்ற சமூகங்கள் எண்ணிக்கையிலும், சமூக நிலையிலும் வன்னியர்களைக் காட்டிலும் கீழானவர்களே இருக்கிறார்கள். கடைநிலைப் பொறுப்புகளிலேயே அவர்கள் இல்லை என்றால், உயர் பொறுப்புகளில் எப்படி இருப்பார்கள் என்று சிந்திக்க வேண்டும்.

உயர் பொறுப்புகளில் வன்னியர்கள் இல்லை என்பதுதான் அன்புமணி ராமதாசுக்கு உண்மையிலேயே கவலை என்றால், உயர்நீதிமன்ற – உச்சநீதிமன்ற நீதிபதிகளாக எத்தனை வன்னியர்கள் இருக்கிறார்கள்? பிரதமர் அலுவலகம் தொடங்கி ஒன்றிய அரசின் பல்வேறு துறைகளில் செயலாளர்கள் உள்ளிட்ட முன்னணி நிர்வாகிகளில் எத்தனை பேர் வன்னியர்கள் இருக்கிறார்கள்? பார்ப்பன மயமாக்கப்பட்ட அப்பணிகளில் தங்களுக்கும் வாய்ப்பு வழங்க வேண்டும் என்று அன்புமணி என்றாவது கோரிக்கை வைத்திருக்கிறாரா? அதற்கான போராட்டங்களை பாமக இனிவரும் காலங்களிலாவது முன்னெடுக்குமா என்று கேள்வி எழுப்ப வேண்டியுள்ளது. சமூகப் படிநிலையில் தங்களுக்கு கீழே இருப்பவர்களை மட்டும் எதிர்ப்பதோ அல்லது அவர்களை ஒடுக்கிக்கொண்டே நாம் மட்டும் முன்னேறினால் போதுமானது என்று சிந்திப்பதோ அப்பட்டமான பார்ப்பனிய மனநிலை. அதை ரவிக்குமாரும், அன்புமணியும் உணர வேண்டும்.

# உள்இடஒதுக்கீடு தீர்ப்பு வரவேற்கத்தக்கது!

இட ஒதுக்கீடு தொடர்பாக உச்சநீதிமன்றத்தின் ஏழு பேர் கொண்ட அரசியல் சாசன அமர்வு மிகச்சிறப்பான தீர்ப்பை வழங்கியிருக்கிறது. இது தலித் பிரிவினருக்கு உள் இட ஒதுக்கீடு வழங்கலாமா? கூடாதா? என்பது குறித்த தீர்ப்பாகும். அப்படி சட்டப்படி உள் இட ஒதுக்கீடு வழங்க மாநில அரசுக்கு உரிமை உள்ளது என்பதே இந்தத் தீர்ப்பின் முக்கிய சாரம்சமாகும்.

ஏழு நீதிபதிகள் கொண்ட அமர்வில் ஒருவர் மட்டுமே உள் இட ஒதுக்கீடு கூடாது என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார். மீதி ஆறு பேரும் உள் இட ஒதுக்கீடு வழங்கலாம் என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். அதில் மூன்று நீதிபதிகள் உள் இட ஒதுகீட்டுக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்தாலும் எஸ்.சி/எஸ்.டி இட ஒதுக்கீட்டில் கிரீமிலேயர் முறை பின்பற்றப்பட வேண்டும் என்ற கருத்தையும் முன்வைத்துள்ளனர். குறிப்பாக ஒரு நீதிபதி மட்டும் முதல் தலைமுறையாகப் படிக்க வருகிறவர்களுக்கு மட்டும் இட ஒதுக்கீடு வழங்கலாம் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார். மற்ற மூன்று நீதிபதிகள் இப்போது உள்ள நடைமுறையிலேயே உள் இட ஒதுக்கீட்டை வழங்கலாம் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆந்திர மாநில அரசு தலித்துகளுக்கு உள் இட ஒதுக்கீட்டை வழங்கியது. அதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கு இது. அந்த வழக்கை விசாரித்த ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு உள் இட ஒதுக்கீடு வழங்க முடியாது என்று தீர்ப்பு வழங்கினார்கள். அந்தத் தீர்ப்பை தான் தற்போது செல்லாது என்று ஏழு நீதிபதிகள் கொண்ட அமர்வு தீர்ப்பு வழங்கியிருக்கிறது. இந்தத் தீர்ப்பை திராவிடர் விடுதலைக் கழகம் முழுமனதுடன் வரவேற்கிறது.

இந்தத் தீர்ப்பில் சில முக்கிய கருத்துகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவை, குடியரசுத் தலைவர் 341வது அதிகாரத்தின் படி பட்டியல் சமூக மக்களின் பட்டியலை அவர் தயாரிக்கிறார். எனவே குடியரசுத் தலைவர் தயாரிக்கிற அந்தப் பட்டியலில் கைவைக்க மாநில அரசுக்கு உரிமை இல்லை என்பதுதான் ஏற்கனவே சொல்லப்பட்ட வாதம். ஆனால் குடியரசுத் தலைவர் தயாரிக்கிற பட்டியலில் வெவ்வேறு ஜாதிப் பிரிவினரும் வெவ்வேறு நிலைகளில் இருக்கிறார்கள் என்பதை அந்தப் பட்டியல் வெளிப்படுத்துகிறது.

ஒவ்வொரு ஜாதிக்கு இடையிலும் பொருளாதாரத்திலும், சமூகத்திலும் பின்தங்கிய வேறுபாடுகள் இருக்கத்தான் செய்கிறது. பட்டியலில் உள்ள அனைத்து ஜாதிகளும் ஒரே தன்மையில் இல்லை. அதனால் இதனைச் சரி செய்ய வேண்டுமென்றால் மிகவும் பின் தங்கிய பிரிவினருக்கு தனி இட ஒதுக்கீடு தேவைப்படுகிறது என்பது முதல் கருத்து.

பட்டியல் பிரிவில் இருக்கும் ஒவ்வொரு ஜாதிக்குள்ளும் தனித்தன்மைகள் இருப்பதையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும் என்பது இரண்டாவது கருத்து. குடியரசுத் தலைவருக்கு பட்டியல் தயாரிக்கும் உரிமை உள்ளதே தவிர இட ஒதுக்கீடு வழங்குவதற்கான உரிமை கிடையாது.

ஏற்கனவே 2005ஆம் ஆண்டு நடந்த இந்த வழக்கில் உச்சநீதிமன்றம், குடியரசுத் தலைவருக்கு இட ஒதுக்கீடு வழங்க உரிமை இருக்கிறது என்ற தவறான ஒரு தீர்ப்பை வழங்கியிருந்தது. இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தற்போது உச்சநீதிமன்றம் கூறியிருக்கிறது. உள் ஒதுக்கீடு வழங்கும் போதும் கூட விருப்பு வெறுப்பின் அடிப்படையில் வழங்க முடியாது எனவும், அதற்கான தரவுகள், அந்தச் சமூகத்தின் நிலைமை உள்ளிட்டவைகளைக் கணக்கில் வைத்து தான் உள் ஒதுக்கீடு வழங்க முடியும் என்ற கருத்தையும் உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டியிருக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் 2009ஆம் ஆண்டு அருந்ததியர்களுக்கு 3% உள் இட ஒதுக்கீட்டைக் கொண்டுவந்தார். அதன் தொடர்ச்சியாக பஞ்சாப், ஆந்திரா அரியானா உள்ளிட்ட மாநிலங்களும் பட்டியல் பிரிவுக்குள் உள் ஒதுக்கீடு முறையை கொண்டுவந்தன. இப்போது தமிழ்நாடு, பஞ்சாப், அரியானா உள்ளிட்ட மூன்று மாநிலங்கள் இந்த வழக்கை நடத்திவருகிறது. ஒன்றிய அரசின் சார்பிலும் நாங்கள் உள் ஒதுக்கீட்டை ஆதரிக்கிறோம் என்ற கருத்தையும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்த உள் ஒதுக்கீடு தலித் ஒற்றுமையை சீர்குலைக்கிறது என்ற வாதத்தை முன்வைத்து சில தலித் அமைப்புகள் நீதிமன்றம் சென்றனர். அந்த வாதத்தைத் தற்போது உச்சநீதிமன்றம் ஏற்க மறுத்துவிட்டது. சமூகநீதி என்பது காலத்தின் தேவைக்கு ஏற்ப ஜனநாயகப்படுத்தப்பட வேண்டும் என்பதையே இந்தத் தீர்ப்பு வலியுறுத்துகிறது. இது வரவேற்கத்தக்க தீர்ப்பு.

விடுதலை இராசேந்திரன்

# ஹிந்துஸ்தானில் கரையும் காஷ்மீர்!

**(நரேந்திர மோடி தலைமையிலான ஒன்றிய அரசு 2019ஆம் ஆண்டில் ஜம்மு காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து மற்றும் மாநில அந்தஸ்தைப் பறித்தது. 370வது சட்டப்பிரிவு நீக்கப்பட்ட பின்னர், 5 ஆண்டுகளில் காஷ்மீர் மிகப்பெரிய வளர்ச்சிக் கண்டிருப்பதாகப் பாஜகவும், சங்கிகளும் கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் காஷ்மீரத்து அமைதியின் பின்னால் நிலைநிறுத்தப்பட்டிருக்கும் அரச வன்முறைகளை விவரித்து டெல்லி பல்கலைக்கழகப் பேராசிரியர் அபூர்வானந்த் தி வயரில் எழுதிவரும் தொடரின் ஒரு பாகம் தமிழில்)**

அபூர்வானந்த்






*அவமானம், அநீதி மற்றும் அடக்குமுறையின் மற்றொரு ஆண்டு கடந்துவிட்டது. காலண்டர் ஆண்டில் ஏற்படும் மாற்றம் இந்தச் சூழ்நிலைகளில் மாற்றத்தைக் கொண்டு வருமா? நான் ஒரு காஷ்மீரியாக இருந்திருந்தால், ஆகஸ்ட் 5 தேதியைக் காலண்டரில் பார்த்ததும் இதுதான் என் நினைவுக்கு வந்திருக்கும். இந்த அவமானத்தையும், அநீதியையும், அடக்குமுறையையும் என்னால் எதுவும் செய்ய முடியாது என்ற எண்ணம் என் பார்வையிலேயே என்னைச் சிறுமைப்படுத்துகிறது.*

*இத்தகைய அவமானம் மற்றும் அடக்குமுறையை எனக்கு நினைவூட்டும் தேதி இந்தியாவின் பிற பகுதிகளுக்கு மகிழ்ச்சியான நாளாக இருப்பதை நான் சோகத்துடனும் வேதனையுடனும் பார்க்கிறேன். எனக்கு அடக்குமுறையின் சின்னமாகத் தெரிவதுதான் அவர்களுக்கு வெற்றிச் சின்னமாகத் தெரிகிறது. ஒரு நிலத்தை முழுவதுமாக இந்துஸ்தானின் ஒரு பகுதியாக ஆக்குவதற்குக் கையகப்படுத்திய மூர்க்கத்தனமான மகிழ்ச்சி.*

### இந்தியாவிற்கு அதிகாரமில்லை

*ஆகஸ்ட் 5, இந்த நாளில்தான் காஷ்மீர் இந்திய அரசியலமைப்பை முழுமையாக ஏற்றுக்கொண்டதாகப் போற்றிக்கொள்கிறார்கள். இதைவிடப் பெரிய பொய்யோ, ஏமாற்றமோ இருக்க முடியாது. 370வது சட்டப்பிரிவை ரத்து செய்தபோது, இந்திய அரசியலமைப்பின் ஆன்மாவை நா டாளுமன்றமே கொன்றது. காஷ்மீரிகளை இந்தியாவுடன் இணைக்கும் நூலை அறுப்பதாகத்தான் இந்த நீக்கம் இருந்தது.*

*சட்டப்பிரிவு 370 என்பது இந்தியாவுக்கும் காஷ்மீருக்கும் இடையிலான சுவர் அல்ல, அது இருவரின் இதயங்களையும் ஒன்றிணைக்க ஏற்படுத்தப்பட்டது. இந்திய அரசோ அல்லது நாடாளுமன்றமோ அதை மாற்ற முடியாது என்பதுதான் அப்போது இந்தியா அவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதி. எந்த விதமான மாற்றத்திற்கும், ஜம்மு காஷ்மீர் அரசியல் நிர்ணய சபையின் ஒப்புதல் கட்டாயமாக இருந்தது. அது இல்லாத நிலையில், மாநில சட்டப் பேரவையின் ஒப்புதலுடன் மட்டுமே எந்த மாற்றமும் செய்ய முடியும். ஆனால், சட்டப் பேரவையே தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு, ஒன்றிய ஆட்சியை அமல்படுத்தியபோது, ஆளுநரின் ஒப்புதலை, சட்டப் பேரவையின் ஒப்புதலுக்கு இணையாக எப்படிக் கருத முடியும்?*

*சட்டமன்றம் என்பது மக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கியது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அவர்கள். ஆனால் ஆளுநர் மக்கள் பிரதிநிதி அல்ல; அவர் ஒன்றிய அரசின் பிரதிநிதி. பிறகு எப்படி அவர் சட்ட சபைக்கு சமமாகக் கருதப்பட்டார்? ஆனால் அது வெட்கமின்றிச் செய்யப்பட்டது, உச்ச நீதிமன்றமும் சரி என்று ஏற்றுக்கொண்டது! ஜம்மு காஷ்மீரில் இருந்து ஒரு மாநிலத்தின் அந்தஸ்தைப் பறித்து, அதன் சட்டமன்றத்தைக் கலைத்ததன் காரணம் மற்றும் நோக்கம் என்ன? சட்டசபை மற்றும் அதை இரண்டு பகுதிகளாகப் பிரிப்பது? இரண்டு பகுதிகளையும் யூனியன் பிரதேசங்களாக மாற்றுவதா?*

*காஷ்மீரிகளை இழிவுபடுத்துவதற்காக இதைச் செய்யவில்லை என்றால், வேறு என்ன காரணம்? உண்மையில், இப்போது, அவர்கள் முற்றிலும் டெல்லியின் தயவில் இருக்கிறார்கள் என்றும், மேல்முறையீடு செய்வதற்கு எங்கும் செல்ல முடி யாது. இந்தியாவில் வேறெந்த மாநிலமு ம் இந்த அவமானத்தைச் சந்தித்த தில்லை. எந்த முழு மாநிலமும் உடைக்கப்பட்டு யூனியன் பிரதேசமாக மாற்றப்படவில்லை. இது ஜம்மு காஷ்மீரில் செய்யப்பட்டது. இது ஜம்மு காஷ்மீருக்கு வழங்கப்பட்ட தண்டனை. அதன் தாழ்வு மனப்பான்மையை நிரந்தரமாக்குவதற்காக இது செய்யப்பட்டது.*

### இந்துமயமாக்கலுக்கு இருந்த தடை

*இதனுடன் இன்னொரு அர்த்தமும் இருந்தது. ஜம்மு காஷ்மீர் மாநிலம் மட்டும் தான் இசுலாமிய முதல்வரைக் கொண்டிருந்தது. இசுலாமியர்கள் அரசியல் ஆதிக்கத்தில் இருந்த இடம். இது ராஷ்டிரிய ஸ்வயம்சேவக் சங்கத்தின் (ஆர்எஸ்எஸ்) சித்தாந்தத்திற்கு முற்றிலும் எதிரானது. எல்லாவற்றிற்கும் மேலாக, ஆர்.எஸ்.எஸ்ஸின் தீன்தயாள் உபாத்யாயாவும் முஸ்லிம்களை அரசியல் ரீதியாகத் தோற்கடிக்கும் நோக்கத்தைப் பற்றிப் பேசியிருக்கிறார். “இசுலாமியர்கள் இந்தியாவில் இருக்க முடியும் மற்றும் இங்கே வாழ முடியும், ஆனால் அவர்கள் எங்கும் அரசியல் முக்கியத்துவம் பெற அனுமதிக்க முடியாது.” அதுதான் ஆர்.எஸ்.எஸ்.சித்தாந்தம்.*

*எனவே காஷ்மீரில் இசுலாமிய மக்களை ஒடுக்குவதற்காக டெல்லி தனது ஆட்களை லெப்டினன்ட் கவர்னர்களாக அனுப்பியது. டெல்லியின் உத்தரவை அங்கு அமல்படுத்த வேண்டும். ஆர்.எஸ்.எஸ்.ஸின் இந்துமயமாக்கலின் பாதையில் - ஜம்மு-காஷ்மீர் என்ற கடைசித் தடையை முடிவுக்குக் கொண்டுவர எடுக்கப்பட்ட நடவடிக்கை இதுவாகும். அதனால்தான், இந்தியாவுடனான ஜம்மு காஷ்மீரின் உறவின் அடையாளமான 370வது சட்டப்பிரிவு ரத்து செய்யப்பட்டு சரியாக ஒரு வருடம் கழித்து, அயோத்தியில் பாபர் மசூதி நிலத்தில் ராமர் கோவிலுக்கு பூமி பூஜை செய்யப்பட்டது, அது தற்செயல் நிகழ்வு அல்ல. ஒரு இசுலாமியர்களின் நிலத்தை இந்துத்துவவாதிகள் ஆக்கிரமித்தது மட்டுமல்ல அது, இசுலாமியர்களின் அடையாளத்தை அழிப்பதன் அடையாளமாகவும் இந்த ராமர் கோவில் உள்ளது. பாபர் மசூதி இடிக்கப்பட்டதைப் போலவே ஜம்மு காஷ்மீரும் இடிக்கப்பட்டிருக்கிறது. பாபர் மசூதி நிலம் ஆக்கிரமிக்கப்பட்டது போல் ஜம்மு காஷ்மீர் நிலமும் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது.*

### அமைதியின் பின்னால் வன்முறை

*இப்போது காஷ்மீரில் நிலம் கையகப்படுத்தப்படலாம், காஷ்மீர் பெண்களும் தங்களுடையதாக இருக்கலாம் என்று இந்துத்துவவாதிகளிடம் கொண்டாட்ட அலை ஓடியதில் ஆச்சரியமில்லை. 370வது சட்டப்பிரிவை ரத்து செய்வதை ஆதரிப்பவர்களின் உண்மையான தன்மையைப் புரிந்து கொள்ள இந்த ஆபாசமான கூச்சல் போதும். ஆகஸ்ட் 5, 2019க்குப் பிறகு காஷ்மீர் பெரும்பாலும் அமைதியாக இருக்கிறது. அங்கு பெரிய எதிர்ப்பு எதுவும் காணப்படாததால் பலர் ஆச்சரியப்படுகிறார்கள். காஷ்மீர் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர் அல்லது வீட்டுக்காவலில் வைக்கப்பட்டனர். அதன் சமூகத்தின் முக்கிய நபர்களும் கைது செய்யப்பட்டனர். காஷ்மீரின் முக்கிய பத்திரிக்கையாளர்கள் கைது செய்யப்பட்டனர் மற்றும் யாரேனும் பேசினால் பின்விளைவுகள் ஏற்படும் என அச்சுறுத்தப்பட்டனர்.*

*அத்தகைய சூழ்நிலையில், காஷ்மீரிகள் அமைதியாக இருப்பதன் மூலம் அதிக மன பலத்தை வெளிப்படுத்தியிருக்கலாம். காஷ்மீர் மக்கள் வாழும் நிலத்தின் ஒவ்வொரு அங்குலத்திலும் ராணுவம் இருக்கும் போது, அதற்கு மதிப்பு இல்லை என்றால், எதிர்ப்பைக் காட்ட வேறு வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். காஷ்மீர் மக்களின் மவுனத்தைத் தங்கள் ஒப்புதலின் ஒப்புதலாகக் கருதுபவர்கள், இந்த ஆண்டு மக்களவைத் தேர்தல் முடிவுகளில் அவர்களின் உண்மையான பதிலைக் கேட்டிருக்க வேண்டும். காஷ்மீரில் எங்கும் வேட்பாளரை நிறுத்த பாஜக துணியவில்லை. அவ்வாறு செய்ய முடியவில்லை. எப்படியிருந்தாலும், கடந்த ஐந்தாண்டுகளாக லெப்டினன்ட் கவர்னர் (துணைநிலை ஆளுநர்) மூலமாகவே பாஜக ஆட்சி செய்து வருகிறது! காஷ்மீர் அமைதியாகி, வளர்ந்து கொண்டிருக்கிறது என்றால், மக்களிடம் சென்று வாக்குக் கேட்க பாஜகவுக்கு ஏன் தைரியம் வரவில்லை? பாஜக ஆதரித்த அனைவரும் மோசமாகத் தோற்றனர். தற்போது ஜம்மு காஷ்மீரில் சட்டசபைத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருவதாகக் கூறப்படுகிறது . ஆனால் ஆளுநர்களுக்கு அதீத அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனவே சட்டசபை அமைந்தாலும், துணைநிலை ஆளுநர்கள் இருக்கும்வரை, சட்டமன்றத்திற்கு அதிகாரம் இருக்காது.*

### இனி காஷ்மீரிகளின் காஷ்மீர் இல்லை

*இந்த ஐந்து ஆண்டுகளில், காஷ்மீரிகள் தங்கள் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் ஒன்றிய பாஜக அரசின் வன்முறையை அனுபவித்திருக்கிறார்கள். எந்த ஒரு ஊழியரையும் காரணம் கூறாமல் பணிநீக்கம் செய்யலாம். காஷ்மீரின் நிலத்தை அனைத்து விதிகளையும், கட்டுப்பாடுகளையும் தளர்த்தி முதலாளிகளிடம் ஒப்படைக்கலாம். காஷ்மீரின் ஆப்பிள் வியாபாரம் அழிக்கப்படலாம். ஆனால் காஷ்மீரிகளின் மவுனத்தில் அதற்கு ஆழ்ந்த மறுப்பு இருப்பது இந்திய அரசுக்குத் தெரியும்.*

*சமீபத்தில், காஷ்மீரில் யோகா தினத்தைக் கொண்டாட பிரதமர் முடிவு செய்தார். இந்த நிகழ்ச்சியில் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் என்று உத்தரவிடப்பட்டு, அதிகாலை 3 மணி முதல் அங்கு இருக்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டதாகவும், அவர்கள் நிகழ்ச்சி நடைபெறும் இடத்தை அடைவதற்கு முன்பு அவர்களின் காலணிகளைக் கழற்றுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இந்த அவமானத்திற்குப் பிறகு, மூடிய மைதானத்தில் அவர்களின் படம் இந்தியாவில் ஒளிபரப்பப்பட்டது. இது இந்திய அரசின் அதிகாரத்தைக் காட்டுவதாகவே இருந்தது. ஒரு மோசமான, வன்முறை காட்சி!*

*காஷ்மீரின் உதடுகள் தைக்கப்பட்டு அதன் மார்பில் இந்திய அரசின் துவக்கம் உள்ளது. காஷ்மீரின் அன்பைப் பாதுகாப்பதற்கான இந்திய வழி இதுதானா? அல்லது அதன் மீதான அன்பை வெளிப்படுத்தும் விதமா இது?*

**தமிழில்: பிரகாசு**

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# ஆணவப் படுகொலைகளை தடுக்க தனிச்சட்டம் தேவை ஓமலூரில் கழகம் கண்டன ஆர்ப்பாட்டம்



ஜாதி ஆணவப் படுகொலைகளைத் தடுக்க தனிச்சட்டம் இயற்றக் கோரியும், தொடர் ஆணவப் படுகொலைகளைக் கண்டித்தும், 04.08.2024 அன்று சேலம் மாவட்டம் ஓமலூர் அண்ணா சிலை அருகில், ஒருங்கிணைந்த சேலம் மாவட்டக் கழக சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர் க.சக்திவேல் தலைமை தாங்கினார். நங்கவள்ளி ஒன்றியப் பொறுப்பாளர் பொ.கிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார்.

சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் கு.சூரியகுமார், சிந்தாமணியூர் நகரத் தலைவர் ம.ரவிக்குமார், சிந்தாமணியூர் நகரப் பொருளாளர் கோ.ஜெயபிரகாஷ், சேலம் கிழக்கு மாவட்ட இளைஞரணித் தலைவர் சி.தங்கதுரை, பவளத்தானூர் இரா.சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. டேவிட், சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் சி.கோவிந்தராசு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் ரமேஷ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சேலம் வடக்கு மாவட்டச் செயலாளர் இரா.தெய்வானை, வி.சி.க ஒழுங்கு நடவடிக்கைக் குழு மாநிலத் துணைச் செயலாளர் செள.பாவேந்தன், திராவிடர் பண்பாட்டு நடுவப் பொறுப்பாளர் முல்லைவேந்தன், தமிழ்ப்புலிகள் கட்சியின் சேலம் மேற்கு மாவட்டத் துணைச் செயலாளர் தீனா, தமிழ்ப்புலிகள் கட்சியின் சேலம் வடக்கு மாவட்டச் செயலாளர் கார்த்தி, சேலம் கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏற்காடு தேவபிரகாஷ், வி.சி.க. கொளத்தூர் ஒன்றியப் பொறுப்பாளர் சேட்டு குமார், சேலம் மாநகரச் செயலாளர் இரா.ஆனந்தி, சேலம் மாநகர அமைப்பாளர் மோ.பாலு, சேலம் மேற்கு மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி சீ.அன்பு, தலைமைக் குழு உறுப்பினர் அ.சக்திவேல் ஆகியோர் ஜாதி ஆணவப் படுகொலைகளுக்கு எதிராக ‘தனிச் சட்டத்தை’ தமிழ்நாடு அரசு கொண்டுவர வேண்டும் என்பதை வலியுறுத்திப் பேசினார்கள்..

நிறைவாக கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு ப.இரத்தினசாமி கண்டன உரையாற்றினார். அவர் பேசுகையில் தொடர்ந்து தமிழ்நாட்டில் ஆணவப் படுகொலைகள் அதிகரித்து வருகிறது. இதற்கு எதிராக கழக சார்பில் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகிறது - இதற்கெதிராக கண்டன ஆர்ப்பாட்டங்களையும் கழகம் தொடர்ந்து நடத்தி வருகிறது. அண்மையில் தருமபுரியில் முகம்மது ஆசிப் என்ற இஸ்லாமிய இளைஞர் தலித் வகுப்பைச் சேர்ந்த பெண்ணைக் காதலித்தார் என்பதற்காக அவரது சகோதரர்களால் ஆணவப் படுகொலை செய்யப்பட்டார். இப்படி ஆணவப் படுகொலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

ஆணவக் கொலைகளுக்கு எதிராக தனிச் சட்டம் இயற்றப்பட்டால் பெருமளவு ஆணவக் கொலைகள் தடுத்து நிறுத்த வாய்ப்பு இருப்பதாகவும், இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு உடனடியாக சட்டத்தை இயற்ற வேண்டுமெனத் தனது உரையில் குறிப்பிட்டு பேசினார்.

முடிவில் சிந்தாமணியூர் நகரச் செயலாளர் முருகேசன் அவர்கள் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சேலம் மாநகரம், சிந்தாமணியூர், குரங்குச்சாவடி, ஏற்காடு, இளம்பிள்ளை, கொளத்தூர், மேட்டூர், மேட்டூர் RS, நங்கவள்ளி, வனவாசி, தாரமங்கலம், மேச்சேரி கோவில் வெள்ளார், மூலப்பாதை உள்ளிட்டப் பகுதிகளில் இருந்து தோழர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

## கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை

**மதுரை:** கலைஞர் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக அரசு 2009ஆம் ஆண்டு கொண்டு வந்த அருந்ததியர் 3% உள் இட ஒதுக்கீடு செல்லும் என உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இதனைக் கொண்டாடும் விதமாக 02.08.2024 அன்று மதுரை மாவட்டக் கழக சார்பில் மாவட்டத் தலைவர் காமாட்சி பாண்டி தலைமையில் சிம்மக்கல்லில் உள்ள கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் திராவிடத் தமிழர் கட்சி மாநிலச் செயலாளர் விடுதலை வீரன், ஆதித்தமிழர் கட்சி மாவட்டச் செயலாளர் சந்துரு, கழக மேலூர் பொறுப்பாளர் சத்திய மூர்த்தி, வேங்கை மாறன், அழகர், கண்ணன் காமாட்சி மற்றும் தமிழ்ப்புலிகள் கட்சியினர் பங்கேற்றனர்.

# வனவாசியில் கலந்துரையாடல் கூட்டம்

**நங்கவள்ளி :** வனவாசி கிளைக் கழக கலந்துரையாடல் கூட்டம் 01.08.2024 அன்று வனவாசி நகரத் தலைவர் பா.செந்தில்குமாரின் இல்லத்தில் நடைபெற்றது.

இதற்கு சேலம் மாவட்டக் கழக அமைப்பாளர் டைகர் பாலன் தலைமை தாங்கினார். மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு, மேட்டூர் அண்ணாதுரை, கிட்டு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் மாதந்தோறும் கலந்துரையாடல் கூட்டம் நடத்துவது, கிளைக் கழக சந்தாவாக ரூ.100/- வழங்குவது, புதிய தோழர்களைக் கழகத்தில் இணைப்பது எனப் பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டன.

இதில் நங்கவள்ளி ஒன்றியப் பொறுப்பாளர் இராசேந்திரன், கிருஷ்ணன், வனவாசி நகரச் செயலாளர் உமாசங்கர், பொருளாளர் பன்னீர்செல்வம், அமைப்பாளர் கதிர்வேல், நங்கவள்ளி பகுதி தோழர்கள் சிவக்குமார், விஸ்வநாதன், தானாவதியூர் பகுதியைச் சேர்ந்த புதிய தோழர்கள் சந்திரசேகரன், விக்னேஷ் ஆகியோர் பங்கேற்றனர்.

## “பாண்டியாறு - மோயாறு” இயக்கத்தினர் தலைவருடன் சந்திப்பு



கோபி: ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிப்பளையத்திற்கு வருகைபுரிந்த கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம், பாண்டியாறு - மோயாறு இணைப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளரும் கழக முன்னோடியுமான அக்ரி அ.நே. ஆசைத்தம்பி சந்தித்து கோரிக்கை மனு ஒன்றை அளித்தார்.

அதில் ஈரோடு, திருப்பூர், கரூர், கோவை ஆகிய 4 மாவட்டங்களில், உள்ள சுமார் ஒரு கோடி பொதுமக்களுக்கும், லட்சக்கணக்கான கால் நடைகளுக்கும், 5 இலட்சம் ஏக்கர் பயிர் சாகுபடிக்கும் பெரிதும் பயனளிக்கும் “பாண்டியாறு - மோயாறு” இணைப்புத் திட்டத்தை நிறைவேற்ற கழகத்தின், ஆதரவு கோரியும், உரிய முன்னெடுப்புகள் மேற்கொள்ள வலியுறுத்தியும் கோரிக்கை மனுவினை வழங்கினார்.

இந்தச் சந்திப்பில் கழக வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன், ஈரோடு வடக்கு மாவட்ட அமைப்பாளர் நிவாஸ், அருளானந்தம் ஆகியோர் உடனிருந்தனர்.

# முகிலன் - ஜஹான் ஆரா இணையேற்பு விழா



பல்லடம் முகில்நிலா மணிகண்டன் - ஜெயபாரதி இணையரின் மகன் முகிலனுக்கும், ஷாஜகான் ஆயினா இணையரின் மகள் ஜஹான் ஆராவுக்கும் இணையேற்பு விழாவானது 28.07.2024 பல்லடம் சாய் மகாலில் நடைபெற்றது.

நிகழ்வில் திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை செயற்குழு உறுப்பினர் இளங்கோவன் வரவேற்புரை யாற்றினார். இணையேற்பு விழாவிற்குக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார். இணையேற்பு நிகழ்வைத் திராவிடர் இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் நடத்தி வைத்தார்.

நிகழ்வில் தமிழ்நாடு அறிவியல் மன்ற தலைவர் சிவகாமி, எழுத்தாளர் பாமரன், திராவிட நட்புக் கழகத்தின் சிங்கராயர், த.பெ.தி.க திருமூர்த்தி, தி.இ.த.பே. பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ், பொள்ளாச்சி கா.சு.நாகராசன் ஆகியோர் வாழ்த்துரையாற்றினார்கள்

திருமண விழாவைத் திவிக திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில் ராசு நெறியாள்கை செய்தார். நிறைவாக தி.இ.த.பே மாவட்டச் செயலாளர் அனுப்பட்டி பிரகாசு நன்றியுரையாற்றினர். திருமண விழாவில் திராவிடர் இயக்க நூல்கள் ரூபாய் 42,000 க்கு விற்பனையானது குறிப்பிடத்தக்கது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : August 08, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran